# தி.மு.கழகம் என்ற ஆலமரத்தை வெட்ட,

# சிலர் பிளேடுகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் - இதெல்லாம் சாத்தியமா?

## அண்ணா – கலைஞர் சிலை திறப்பு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

தஞ்சாவூர், நவ. 9 –

**தஞ்சாவூர் மத்திய மாவட்டம், திருவையாறு தெற்கு ஒன்றியம், கோனேரிராஜபுரம் – கருப்பூரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து, பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச்சிலைகளை, தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

இதைத் தொடர்ந்து, கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திருவையாறு சட்டமன்றத் தொகுதிக்கான கலைஞர் நூலகத்தையும் திறந்து வைத்து, அங்கு திரண்டிருந்த வேளாண் பெருங்குடி மக்களிடையே துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை யாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

இந்தத் தஞ்சை மாவட்டத்திற்குப் பலமுறை வந்து இருக்கிறேன். இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத் துறையின் அமைச்சராக வந்து இருக்கிறேன். இன்று முதன்முறையாக உங்களையெல்லாம் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று உங்களின் அன்பையும், வாழ்த்துகளையும் பெற வந்து இருக்கிறேன்.

சென்ற செப்டம்பர் 28-ஆம் தேதி தலைவர் அவர்கள், துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை வழங்கிய பிறகு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கழக நிர்வாகிகள், என்னைப் பார்த்து வாழ்த்து சொல்வதற்காகச் சென்னையை நோக்கிப் படையெடுத்து வந்தார்கள். அவர்களிடம் ஒரு வேண்டுகோள் மட்டும் வைத்தேன். தயவுசெய்து யாரும் வராதீர்கள். நானே உங்களின் மாவட்டத்திற்கு வந்து உங்களையெல்லாம் தனித்தனியாகச் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெற வருகிறேன் என்று சொன்னேன்.

### அன்பு மழை-வாழ்த்து மழை!

சென்ற இரண்டு நாட்களாக விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, கழகத்தினரின் அன்பையும், வாழ்த்துகளையும் பெற்று, நேற்று முன்தினம் இரவே



தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்தேன். தஞ்சையில் எப்போதும் நவம்பர் மாதம் மழைப்பெய்யும் என்று சொல்வார்கள். உண்மைதான். உங்களின் அன்பு மழையிலும், வாழ்த்து மழையிலும் நனைந்து கொண்டிருக்கிறேன்.

நம் கழகத் தலைவர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி, தமிழ்நாட்டின் அனைத்துத் தொகுதிகளிலும் கலைஞரின் திருவுருவச் சிலையைத் திறக்க வேண்டும் என்று கட்டளையிட்டு இருந்தார்கள். அதேபோல் தலைவர் அவர்களே பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று கலைஞரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்.

அப்படிப்பட்ட வாய்ப்பு எனக்கும் கிடைத்து இருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் திறந்து வைத்துவிட்டு, நேற்று முன்தினம் விழுப்புரம், திருக்கோவிலூர் தொகுதியில் கலைஞரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துவிட்டு, இன்று தஞ்சையில் திறக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன் என்றால், உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் அவர்களுக்கும், ஒன்றியச் செயலாளர்களுக்கும், வந்திருக்கின்ற கழகத் தோழர்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கூடுதல் சிறப்பு!

இதில் கூடுதல் சிறப்பு என்னவென்றால், இன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருக்கின்ற கலைஞரின் சிலையத் திறந்து இருக்கிறோம். அது மட்டுமல்ல, கலைஞரின் நெஞ்சில் எப்போதுமே நிறைந்திருந்த பேரறிஞர் அண்ணாவின் சிலையையும் திறந்திருக்கிறோம். நான் திறந்து வைக்கின்ற பேரறிஞர் அண்ணாவின் சிலை இந்தத் தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருப்பது எனக்குக் கூடுதல் பெருமை.

சிலையை மட்டும் திறந்து வைக்கவில்லை. சிலையைத் திறந்து வைக்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் இலட்சியங்களை, அவர்களின் எழுத்துக்களை, அவர்களின் எண்ணங்களை, அவர்களின் கோட்பாடுகளை, மக்களின் மனதில் விதைக்க வேண்டும் என்று அர்த்தம்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சி!

பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டுதலில் ஐந்துமுறை தமிழ்நாட்டை ஆண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எல்லா விதத்திலும் வித்திட்டவர் கலைஞர் அவர்கள். அவரின் வழியில் இன்றைக்கு உங்களின் ஆதரவோடு, உங்களின் மகிழ்ச்சியோடு இன்றைக்கு நம் கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடல் அரசை மிக வெற்றிகரமாக மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்து, நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

இன்னும் ஒன்றரை வருடத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல். இந்த நேரத்தில் உங்களுக்கு இன்னொரு விதத்தில் நன்றி சொல்லி ஆகவேண்டும். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில், தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்கு நம் தலைவர் அவர்கள் முரசொலி அவர்களை உங்களிடத்தில் ஒப்படைத்தார். கிட்டத்தட்ட 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தந்தது இந்தத் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி.

### 100 சதவிகித வெற்றி

தஞ்சை மட்டுமல்ல, மிகப்பெரிய சாதனை வெற்றி. 40 தொகுதிகளிலும் 100 சதவிகித வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நம் தலைவருக்கு, நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, நம் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணிக்கு தமிழ்நாட்டு மக்கள் அளித்தார்கள் என்றால், அந்த மூன்றரை வருட ஆட்சிக்கு மக்கள் சான்றிதழ் தான் அந்த வெற்றி.

அந்த வெற்றியைவிட மிகமிக முக்கியமானது, இன்னும் ஒன்றரை வருடத்தில் வரப்போகின்ற சட்டமன்றத் தேர்தல் வெற்றி. அந்த வெற்றியை நம் தலைவர் அவர்கள் முப்பெரும் விழாவில் சொன்னார்கள். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதியில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிப் பெற்றாக வேண்டும்.

அதற்கு நீங்கள் அத்தனைப்பேரும் கழக அரசின் சாதனைகளை ஒவ்வொரு வீடாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்.

இங்கு எத்தனையோ பேர் வருகிறார்கள். அ.தி.மு.க.-வில் பல அணிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். அதைப் பற்றி எல்லாம் நாம் கவலைப்படத் தேவையில்லை. யார்யாரோ புதிதாக வந்து விமர்சனம் செய்கிறார்கள். திராவிட மாடல் அரசு என்றால் என்ன என்று கேட்கிறார்கள்.

மக்கள் சந்தோசமாக இருக்கிறார்கள். மக்களிடம் சென்று கேளுங்கள். மக்கள் சொல்வார்கள் திராவிட மாடல் அரசு என்ன என்று. திராவிட முன்னேற்றக் கழகம் யாராலும் தொட்டுப் பார்க்க, அசைத்துப் பார்க்க முடியாத இயக்கம். எப்பேர்ப்பட்ட புயலையும் தாங்ககூடிய இயக்கம், நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

### இதெல்லாம் சாத்தியமா?

இன்று சிலர் பிளேடுகளை எடுத்து கொண்டு வருகிறார்கள். தி.மு.க. என்ற ஆலமரத்தை வெட்டப்போகிறேன் என்று. இதெல்லாம் சாத்தியமா? அவர்களுக்கெல்லாம் சொல்லக்கூடிய ஒரே பதில் 2026-ஆம் தேர்தலில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க வெற்றிப்பெற்று நம் முதலமைச்சர் அவர்களை மீண்டும் அந்த முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைப்பதுதான் நம் ஒரே இலட்சியம். அந்த உறுதியை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பேரறிஞர் அண்ணாவின் சிலையின் முன்பு, முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையின் முன்பு அந்த உறுதியை எடுத்துக்கொள்வோம்.

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தருவோம். நம் தலைவரை மீண்டு ஏழாவது முறையாகத் தி.மு.க-வை ஆட்சியில் அமர்த்துவோம். மக்கள் பணி ஆற்றுவோம் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, கோவி.செழியன், எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எஸ்.கே, அண்ணாதுரை, பூண்டி கலைவாணன், கழகத்தின் உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், சாக்கோட்டை அன்பழகன், அசோக்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம், மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், ஏ.கே.எஸ்.விஜயன், துணை மேயர்கள் சுப.தமிழழகன், அஞ்சுகம் பூபதி, இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் இளையராஜா, திருவையாறு தெற்கு ஒன்றியச் செயலாளர் கௌதமன், திருவையாறு ஒன்றிய பெருந்தலைவர் கோ.அரசாபகரன், பேரூர் செயலாளர் அகமது மைதீன், கரூப்பூர் கிளைக் கழகச் செயலாளர் இருதயராஜ், குணசேகரன், இளையராஜா, செந்தில், ஜெகநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில் வேந்தன், துணை அமைப்பாளர் எம்.எஸ்.வெங்கடேசன் உள்ளிட்ட கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் உள்பட பலரும்கலந்து கொண்டனர்.

---

வேலூர் மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர்

# கோபி தூயவன் மருத்துவமனை திறப்பு விழா!

## பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்து வாழ்த்துரை!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. - டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. முன்னிலை!

வேலூர், நவ. 9-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் பி.கே.புரம் ஊராட்சியில், குடியாத்தம் காட்பாடி பிரதான சாலையில் அமைந்துள்ள, காசி முதலியார் வளாகத்தில், வரும் 13.11.2024 புதன்கிழமை மாலை 4.30 மணி அளவில், மாநில கலை இலக்கிய பத்தறிவு துணைச் செயலாளரும், முரசொலி தமிழ் மன்ற நிறுவனரும் பர்கூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கே.வி.குப்பம் சி.கோபி மகன் மாவட்ட மருத்துவர் அணியின் துணை அமைப்பாளர் மருத்துவர் கோவி தூயவன் தொடங்கவுள்ள, விஜயா மருத்துவமனையை, வேலூர் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. ஆகியோர் முன்னிலையில், நீர்வளம், கனிம வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர், கழகத்தின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், புதிய மருத்துவமனையை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக, துரை சிங்காரம், ஒருங்கிணைந்த கே.வி.குப்பம் மேற்கு, மத்திய, கிழக்கு ஒன்றியங்களின் செயலாளர்களான, கே.சீதாராமன், லோ. இரவிச்சந்திரன் (ஒன்றிய குழு பெருந்தலைவர்), இரா.முருகேசன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இவர்களுடன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர்.சுந்தரவடிவேலு, தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள், கே. தயாளமூர்த்தி, வி.டி.சிவகுமார், ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாரதி வெங்கடேசன், முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர், வி.டி.ஜெயக்குமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரி மளம், ஒன்றியக் கழக அவைத் தலைவர்கள் இரா.தாமோதரன் (ஒன்றிய கவுன்சிலர்), எம். அசோக்குமார், வெ. ஜெயராஜ், மாவட்ட நட்புக் கழகச் செயலாளர் சா. குமரன், மாவட்ட கவுன்சிலர்கள் கவிதா சுதாசேகர், கிருஷ்ணமூர்த்தி, மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், ஏ.ஏழ்மைநாதன், நளினி ராம மூர்த்தி, கட்டுக்கல் பாஸ்கர், சி.மார்க்கபந்து, கீழ்புதூர் வெங்கடேசன், மத்திய ஒன்றியக் கழக நிர்வாகிகள், கவுன்சிலர்வேலு, சி.வேலு, முடினாம்பட்டு கு.குப்பன், குட்டி (எ) தியாக ராஜன், அசோகன், எம்.உதயசூரியன்,

கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் செஞ்சி நாராயணன், ப.மடங்கி வெங்கடேசன், கவிதா சிதம்பரம். அன்னங்குடி அன்பழகன், தட்சிணா மூர்த்தி, கே.கே.சிட்டிபாபு, வழக்கறிஞர்கள் ஜி.விஜயக்குமார், சு. மோகன்ராஜ், கே.பி.கருணாநிதி, வ.எத்திராசன், கவசம்பட்டு ச. மணிகண்டன், நடத்துனர் செயலாளர் சி.மதியழகன்., பாலா சேட்டு, கவுன்சிலர், டி.ரவி, சிவகாமி, சேத்து வண்டை நா. சந்திரபாபு, ஆர்.சத்யநாதன், எஸ்.டி. ரகு ராதிகா, சிரிதேவி, மு. தலைவர் பத்ம நாபன் காமராஜபுரம் பெ.முருகேசன், பங்க்கடை கருணாகரன், ஐ.டி.விங் முரளி, க.சுரேஷ், ஆசிரியர் இரா.இரவிச்சந்திரன் வீரா.குமரன், மகேந்திரன். சிகா.ரமேஷ், சி. பாண்டியன், மகா. முனிசாமி, மு.சக்கரவர்த்தி, எம் அசோகன். அ.தமிழ் வேந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முரசொலி தமிழ் மன்றம் சார்பாக கோவி.அழகிரி ஒருங்கிணைத்து அனைவரையும் வரவேற்கிறார்.

மாவட்டப் பிரதிநிதி கோ. இளங்கோ, ஊராட்சி மன்றத் தலைவரும், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளருமான ச.மோகன் ஆகியோர் நன்றி கூறுகின்றார்கள்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

மி.து.ந.க.எண்.மே2 / பி1 / 3321 / 2024

**குறுகிய கால மறு மின் ஒப்ப அறிவிப்பு**

மின்துறையில் 4 பணிகளுக்கு மின் ஒப்பம் கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை அவர்களால் வரவேற்கப்படுகிறது.

**Supply, Installation and Commissioning of Diesel Generator set for UPHCs in GCC, Zone - 4, 5, 8 & 10.**

**பணியின் மதிப்பு : குறைந்தபட்சம் ரூ.69,18,887.52 முதல் அதிகபட்சம் ரூ.87,21,055.50 வரை**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **14.11.2024 பிற்பகல் 3.00** மணிக்குள் பங்கேற்கலாம். **15.11.2024 பிற்பகல் 3.15 மணிக்கு** ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 4806 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**


---

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில்

# சபரிமலைக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

## மேலாண் இயக்குநர் இரா.மோகன் தகவல்!

சென்னை, நவ. 9–

கேரள மாநிலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சபரிமலையில் உள்ள அய்யப்பன் ஆலயத்திற்கு, ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மண்டல பூஜை மற்றும் மகர விளக்கு ஆகிய திருவிழாக்களின் போது, தமிழகத்திலிருந்து அய்யப்ப பக்தர்கள் சென்று வர ஏதுவாக, தமிழகத்தின் முக்கிய நகரங்களிலிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஆண்டு தோறும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த ஆண்டும் 15.11.2024 முதல் 16.01.2025 வரையில், (சென்னை கோயம்பேடு மற்றும் கிளாம்பாக்கம்), திருச்சி, மதுரை மற்றும் புதுச்சேரி / கடலூர் ஆகிய இடங்களிலிருந்து பம்பைக்கு, அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் (Ultra Deluxe) மற்றும் குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதி உள்ள (NSS) சிறப்புப் பேருந்துகளாக இயக்கப்படவுள்ளன. (சபரிமலை தேவஸ்தானம் அறிவிப்பின்படி 27.12.2024 முதல் 30.12.2024 மாலை 5.00 மணி வரை கோவில் நடை சாத்தப்படுவதால் 26.12.2024 முதல் 29.12. 2024 வரை இச்சிறப்புப் பேருந்து இயக்கப்படமாட்டாது)

இந்த வருடம் பக்தர்கள் கூடுதலாக பயணம் செய்ய முன்வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றினை கருத்தில் கொண்டு சென்னை மற்றும் இதர இடங்களிலிருந்து கூடுதலாக பேருந்துகள் இயக்குவதற்கு அனுமதி பெறப்பட்டு சிறப்பான முறையில் பேருந்துகளை இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் குழுவாக செல்லும் பக்தர்களுக்கு வாடகை அடிப்படையில் பேருந்து வசதி செய்து தரப்படும்.

மேலும், 60 நாட்களுக்கு முன்னதாக இச்சிறப்புப் பேருந்துகளுக்கு Online மூலமாக, www.tnstc.in மற்றும் TNSTC Official app ஆகிய இணையத்தளங்களில் முன்பதிவு செய்துகொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பேருந்துகளின் விவரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களுக்கு, 9445014452, 9445014424 மற்றும் 9445014463 ஆகிய கைப்பேசி எண்களைத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மற்றும் பி.எல்.ஏ.–2, பூத் கமிட்டி கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்பித்தார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வினோத்காந்தி, தொகுதி பொறுப்பாளர் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.ஏ. ஆதிசேஷன், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் துரை மஸ்தான், குமுதா குமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், ஒன்றியச் செயலாளர்கள் சேஷாவெங்கட், ஏ.வி.நந்தகுமார், எம்.சண்முகம், நகரச் செயலாளர்கள் பி.பூங்காவனம், து.தில்லை ஹீமாயூன், பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தொன் போஸ்கோ மற்றும் கழக அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.